**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW12 (PW8) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 20.11.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சத்தியமூர்த்தி (எ) மூர்த்தி | Father Name | : | திரு.சின்னதம்பி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் மேட்டு சூளக்கரை கிராமத்தில் வசிக்கிறேன் . நான் விடுதலை சிறுத்தை கட்சியில் மத்தூர் ஒன்றிய செயலாளராக உள்ளேன். இறந்துபோன கேசவன் எனக்கு சித்தப்பா முறை வேண்டும் . மேற்படி கேசவன் சாலைமரத்துப்பட்டி பஞ்சாய்த்திலுள்ள ஓலைப்பட்டியில் உள்ள கம்பெனியில் செக்யூரிடியாக பணிபுரிந்தார். போலீசார் 2021 வருடம் ஒரு நாள் சாயங்காலம் 6.30 மணியளவில் ஊரில் ஒரு சம்பவம் நடந்துள்ளது உண்மையா என்று கேட்டார்கள் , நான் ஊரில் இல்லை என்று சொன்னேன். தகவலை பெற்று நான் மேல் சூளக்கரை பேருந்து நிலையத்தில் அம்பேத்கர் சிலை அருகே போய் இருந்தேன்.

அப்போது மாலை 6.45 மணி இருக்கும் நான் போவதற்கு முன்பாகவே கேசவனை அந்த இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு அழைத்து போய் விட்டார்கள். கேசவனை போச்சம்பள்ளி ஜி.எச்–க்கு எடுத்து சென்று இருந்தார்கள். தற்போது ஆஜரில் இருக்கும் இந்த தம்பி தான் மது

போதையில் கேசவனை தாக்கியதாக சொன்னார்கள் . எந்த இடத்தில் எதிரி தாக்கினார் என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை . பேருந்து நிலையத்தில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் இருந்தார்கள் , அவர்கள் தான் எனக்கு தகவலை சொன்னார்கள். நான் வருவதற்கு முன்பாக போலீசார் அந்த இடத்தில் இருந்தார்கள். தற்போது காண்பிக்கப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்துக்கள் எதுவும் என்னுடையதில்லை . போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் போலீஸ் விசாரணையின் போது கடந்த 21.10.2021 ம் தேதி காலை 6.00 மணி அளவில் சூளக்கரை பஸ்டாப் அம்பேத்கர் சிலை அருகே உள்ள பெரியார் சிலை அமைப்பதற்கான பீடம் அருகே காவல் ஆய்வாளர் வந்து கேசவன் தாக்கப்பட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு கொண்டு இருந்தார்கள் என்றும் அப்பொழுது என் முன்னிலையிலும் , அதியமான் என்பவர் முன்னிலையிலும் ஒரு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்று கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று சாட்சியத்தை மாற்றி சொல்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

கேசவன் அடிபட்டதற்கும் இந்த எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இறந்துப்போனவர் என் உறவினர் என்பதால் அவர் குடும்பத்திற்கு ஆதரவாக கேசவனை தம்பிதுரை தாக்கியதாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.11.21 10:22:45 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW7 (PW7) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 20.11.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.அண்ணாமலை | Father Name | : | திரு.ஆறுமுகம் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேட்டு சூளக்கரையில் கிராமத்தில் வசிக்கிறேன் . மேஸ்திரி வேலை செய்கிறேன். கடந்த 3 வருடங்களாக நான் மேட்டு சூளக்கரை கிராமத்தில் வசிக்கிறேன். எனக்கு வீடு வந்திருக்கிறது அதனால் என் ஊர் பெயர் மற்றும் ஆதார் கார்டை DMK காரர்கள் எழுதி வாங்கினார்கள். இந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு ஏதும் தெரியாது . அந்த சமயத்தில் நான் ஒசூருக்கு வேலைக்கு போய் இருந்தேன் . வாரத்திற்கு ஒருமுறை தான் ஊருக்கு வருவேன். எனக்கு இந்த வழக்கு விவரம் பற்றி ஏதும் தெரியாது . இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என் மகனிடம் கேட்டுள்ளார்கள் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 20.10.2021 அன்று மாலை 6.30 மணிக்கு சூளக்கரை பஸ் டாப் அம்பேத்கர் சிலை அருகே இருந்தபொழுது எங்கள் ஊரை சேர்ந்த கேசவனிடம் , ராமன் மகன் தம்பிதுரை (எ) அறிவு தகராறு செய்து கொண்டு இருந்தார் என்றும் , அப்போது தகவல் கேட்டு அவருடைய மகள் அன்புநிலா, மருமகன் தமிழ்குடிமகன் , கோவிந்தசாமி ஆகியோர் வந்ததார்கள் என்றும், அப்பொழுது கேசவன் தம்பிதுரையிடம் ஏன் வீண் தகராறு செய்கிறார் என்று கேட்ட பொழுது தம்பிதுரை ஆவேசம் அடைந்து கேசவனின் கன்னத்தில் மாறி மாறி கையால் அடித்தார் என்றும் , கையில் இருந்த வளையத்தை கழற்றி கேசவனின் வலது பக்க கண்ணுக்கு கீழ் குத்தினார் என்றும் , கேசவன் கீழே விழுந்துவிட்டார் என்றும் , கீழே விழுந்த கேசவன் மீது தம்பிதுரை உட்கார்ந்து கொண்டு நெஞ்சின் மீது குத்தினார் என்றும், கேசவன் மூச்சி பேச்சி இல்லாமல் கிடந்தார் என்றும் , கேசவனுக்கு தண்ணீர் கொடுத்தோம் என்றும் , கேசவனை அவருடைய மகள் மற்றும் மருமகன் , கோவிந்தசாமி சொந்தமான காரில் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது தவறு.

மேலும் போலீஸ் விசாரணையில் டாக்டர் பரிசோதனை செய்து விட்டு இரவு 7.10 மணிக்கு கேசவன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும் இது சம்பந்தமாக அன்புநிலா கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், என்னை போலீசார் இது சம்பந்தமாக விசாரித்தார் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்

சம்பவம் சமயத்தில் ஒசூரில் பணிபுரிந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**